உ

சிவமயம்

இஃது

ஸ்ரீமத் பிரிதிவீஸ்வரவம்சம் கஞ்சி காமாக்ஷியம்மன்

வரப்ரசாதிகளாகிய

(24) மனையார்களின் சமுகம்

மெய்கண்ட சந்தானம்

ஸ்ரீமத் வேலைய தேசிகர் மாணவன்

எஸ். கே. வெள்ளைச்சாமி கவிராயன்,

கிள்ளைவிடு தூது.

ஸ்ரீசாது காமாக்ஷியம்மன் துணை

ரிஜிஸ்தர் காபிரைட்

இராயபுரம் மதராஸ்.

1931

மாணிக்க விலாசம் பிரஸ்—சென்னை.

இஃது

பாண்டிமண்டலம் செவ்வல்மாநகரம் தமிழ்
சாஸ்திர நிபுணர் ஸ்ரீ-ல-ஸ்ரீ எம். ஏ.
நெயினான்முகமதுப் பாவலறவர்
களியற்றிய சிறப்புப்பாயிரம்.

ஆசிரிய விருத்தம்

கனமேந்துமிருபத்து நான்குமனை யார்க்
கினிய காமாக்ஷி யம்மை சீர்த்தி
தனமேந்து வழிபாட்டின் மறபெளுந்த
தண்மையெலலாஞ் சார்புநூலாய்
வனமேந்து கிள்ளைவிடு தூதெனவோர்
கலிவெண்பா மதுரத் தேனும்
இனமேந்து முத்தமிழின் புத்தமுர்தக்
கடன்மடை போலியற்றினால்

நாவலந்தீ வெனும்பர தகண்டத்துட்
டிகழ் சென்னை ராஜதானிப்
பூவளத்துட் திருப்போரூர் முருகபிரான்
மேறகிதம் புகன றுகந்தோன்
பாவஙகையா மிலககணங்கள் கரைகண்டு
பேரெடுதத பாவலோர்கள்
ஆவலுட னிவன்றமிழைக் கேட்டவுடன்
மனங்களிக்கும அறிவுள்ளோனே

அள்ளிதழ் வெள்ளைததாமரைத் தவிசில்
வீற்றிருப்பா ளன்பிற்கேற்ற
பிள்ளையிவ னென்றுதித்த பெருங்கவி
ராயன்குருவின பேரன்புள்ளோன்
வள்ளலெனும் வேலைய தேசிக
ஸ்வாமிகள்நேயம் வகித்தசீடன்
வெள்ளைச் சாமிப்புலவன் கவியருமை
யிதை யெவரும் விள்ளற்பாற்றோ.

உ

இஃது

வேதாந்த வித்வ

வேதாசல செட்டியார் இயற்றிய

சாற்றுக்கவி

நேரிசை வெண்பா.

சீருய் திருமறையிற் செழித்த நற் சின்மயத்தைப்
பாருயணஞ் செய்யும் பண்பன் நேருய்
வெள்ளைச்சாமிப் புலவன் விளம்பினன் செந்தமிழாற்
கிள்ளைவிடுந் தூதிதனைக் கேள்.

பதினன்கு சீருசிரியம்.

தண்ணிலகுபாக சத்திரியராம் நம்குலந்
தனிலவதரித்த சித்தன்
தன்மோன வடிவினிற் தங்கிமிகுமிச்சையைத்
தர்க்கித்திடுஞ் சமர்த்தன்
கன்னலினிதான செந்தமிழ் மொழி புகன்றிடுங்
கவிருயசிங்க நிபுணன்
கற்றிடு மிலக்கணமிலக்கிய மிலங்கக்
கருத்துரை புகன்ற பக்தன்
சண்முகானந்தசுக நிஷ்டையைக் கண்டதைச்
சார்ந்த சிவ சமயமுத்தன்
சன்மார்க்க நெறியுள்ள நம்மினத்தவரிடஞ்
சந்திக்குமின்ப மோதிப்
பண்ணிலகு நாவலர் பாவலர் வியக்கப்
பகர்ந்தான் கிளித்தூதிதைப்
பரிவுடன் பாடியே பண்புபெற வேண்டினன்
பான்மையென் றுணருவீரே.

சிவமயம்.

குற்ருலம்

கந்தசாமி செட்டியார் இயற்றிய

சாற்றுக்கவி

பதினன்கு சீருசிரியம்.

அட்டகிரி யெட்டுந்திரகூஷியுற வட்டமிட்
டாலித்து நிர்த்தனமிடும்
ஆங்கார மயிலேரி வோங்கார நடனமிடும்
அருமுகவனுபய பாதம்
விட்டகுறை வந்தொக்க வந்திக்கவழிதந்த
வேலையஸ்வாமி சீடன்
வேதாந்தநிலை கண்ட மெஞ்ஞானசாது குல
வெள்ளையச்சாமி யென்பான்
திட்டமொடு நம்மவர்கள் செயல்கண்டு தெளிவுறச்
செப்பின னருமைவாய்ந்த
செந்தமிழ்க்கினிதான கிள்ளைவிடுந்தூதிதைத்
தேவர்களுமாசிகூற
இட்டதிடுபோதுமென வேண்டினனவனின்ப
மெதுவெனக் கண்டுகந்தே
இன்புற்ற நம்மினத்தார்களனைவோர்களும்
இஷ்டங்கணித்தருளவே.

திருப்புகழ் சந்தம்.

அருமறைகளோதும் திருமகிழும் நேசன்
அரிமருகனை குமரேசன்
அடிமலர்கள்நாளும் முடியதனில் சூடும்
அருமை கவிபாடும் அதிதீரன்
திருமலியுஞான குருவினுபதேசம்
திகழவொளிவீசும் வெள்ளைச்சாமி
திறமையுடன்பாடி விடுமினிய தூது
தெளிவிதெனநீரும் உணர்வீரே.

கருத்துரை

பதினன்கு சீருசிரியம்.

முன்னவர் புகன்ற மூதுரை போன்றும்
முழுமுதற் கடவுளாம் பரமன்
தன்னருள் விளம்புந் தத்தையின் தூதைத்
தமரனைவோர்களுங் காணச்
சொன்னதைப் பகருங் கிளித்தமிழியல் பாய்த்
தொகுத்தனன் சொல்லியல் புணர்ந்தோர்
நன்னயமானதென மகிழ்ந்திடுவார்
நவின்றிடா ருணர்ந்திலாதவரே.

மாமாக்ஷியா யுதித்த மகாமகக்ஷ
க்ஷத்திரியர்களின் மரபிற்றோன்றிப்
பூமாக்ஷியாக வரும் பிரிதீசன்
வங்கிசத்திற் பிரியம்வைத்தே
நாம்மகிழ்ச்சிகூரு மிருபத்தினன்
கரண்மனையார் பணியுந்தேவி
காமாக்ஷிமலரடிக்கே நமஸ்காரம்புரிந்து
கிளிக்கவி சொல்வோமால்.

நாமேதாம் கற்றுயர்ந்தோம் மிகத்தெளிந்தோ
மெனச்சிறப்பாய் நவிலவில்லை
பூமேவுஞ் சரஸ்வதியாள் திருவிளையாட்டென
வியந்தே புகன்ருே மின்சொல்
காமாக்ஷி தவப்புதல்வ ரனைவர்களுங்
கவனிப்பீர் கிளியின் தூதை
ஆமோதிப்போர்க்கினிதா மல்லாதாற்கென்
புகல்வேனவள் சொல்வாளே.

நலங்கருதா திகழ்ந்தவர் தாமென்கண்டார்
நானிலத்தில் நவிலுமின் சொல்
குலங்கருது மினியமொழி கிளிக்குணர்த்து
மியல்பெனவே கூறினேமால்
துலங்குதமிழ் காமாக்ஷி வரப்பிரசாதிகளன்றித்
தோதார் காண்பார்
அலங்கிருதத் தமிழியம்பும் முருகபிரான் திரு
வருளால் யான் சொல்வேனே.

திருச்சிற்றம்பலம்.

அவையடக்கம்

பதினான்கு சீருசிரிய விருத்தம்.

ஆதிப்ரிதீஸ்வரன் அமரர்களியற்றிடும்
யாகத்தி லவதரித்தே
அந்தகாசூரனொடு வந்த சூர்ப்படையுடன்
அவனையும் வென்றதாலே
நீதிவழுவாததிரு மாலயன் முதலியோர்
நெட்டிலைச் சூலாயுதன்
நேர்மையைக் கண்டுமது வம்சமித் தரணியில்
நிலவிடச் செய்கவெனவே
சோதிப்ரகாசமயமாய் வரும் மேலவன்
சுராருக்கிசைந்து புவியில்
சுதர்களென நான்கு புத்திரர்களைப் பெற்றனன்
சுகுணக்குமாரறவர்கள்
கியாதியாய் வாழ்ந்து பத்துப்பெயரை யீன்றனர்
கீர்த்தியுரு மன்னவர்களாற்
கிளர்ச்சியுருமிரு பத்துநான்கு மனையார்களின்
கெம்பீரமே விள்ளுவாம்.

சிவமயம்.

வேலுமயிலுந் துணை

ஸ்ரீசாது காமாக்ஷியம்மன் வரப்ரசாதிகளாகிய

பிரிதீஸ்வர வம்சம் (24) மனையார்களின் சமுகம்

ஸ்ரீமத் வேலையதேசிகர் மாணவன்

S. K. வெள்ளைச்சாமி கவிஞன் கிள்ளைவிடு தூது

கணபதி துதி.

கிள்ளைத் தமிழியல் சொல்ல மகிழ்ந்தருள்
வள்ளற் கணபதி மலரடி பணிவாம்.

சரஸ்வதி துதி வெண்பா.

திருமால் மருமகளே தெள்ளுதமிழ்ச் சீரியல்சேர்
அருமாமறையோர்க்கருளமுதே திருவருள்சேர்
அன்பார்ந்திலங்கும் அருங்கிளியே சாரதியே
இன்புகந்தே செஞ்சொல் இசை.

முருகபிரான் தோத்திரம்.

கலைத்தமிழ்க்கடலே தெய்வகுஞ்சரிக்கிசைந்த கோவே
மலைக்குறமகள் மணாளா மணத்திடுங்கடம்பார் தோளா
நிலைத்திடுந் தவத்தோர் போற்றும் நித்தியானந்தவாழ்வே
கிளித்தமி ழியல்பாயோதக் கிருபைகூர்ந்தருள் செய்வாயே.

கிளி வெண்பா.

செங்கலைகளாய்ந்தே தெளியுஞ் சிறுகிளியே
மங்கள கல்யாணகுண மாக்ஷிமையா யிங்கிலங்குஞ்
சாதுகுலச் சத்திரியர் தங்களிடஞ் சென்றினிய
தூதுவனைப்போ விதனைச் சொல்.

கலிவெண்பா.

தென்னைகமுகுபலாச் செங்கதலிமாமுதலாம்
வுன்னதஞ்சேர் பூஞ்சோலை வோங்குமெழிற் சென்னைதனிற்
சேர்ந்திலங்குந் தெய்வீகத் திருவொற்றியூரைரோட்
டார்ந்திலங்குஞ் சிங்காரத் தோட்டமதிற் சார்ந்திலங்குஞ்
சாது காமாக்ஷியம்மன் தரும் வரப்ரசாதிகளாம்
ஆதிப்பிரிதீஸ்வரன் குலத்தார் வோதுதுங்கேள்
அந்தகாசூரனென்போ னக்ரமித்தே வல்லபத்தா
லெந்தந்தத்தேவரையு மிம்சித்தான் சந்ததமும்
அவனா லடிபட்டலங்கோலமா னசுரர்
தவமாகும் வேள்வியொன்று தாம் செய்தார் சிவமாகுந்
தெய்வத்திருவருளே சேர்ந்தோருருவாகி
வையகத்தினிற் பிரிதிவீஸ்வரனாய் மெய்வகுத்த
திருமாலயன் முதலாந் தேவர்குளாங்கட் கிசைந்தே
வருவான்போற் சூலாயுதமேந்தி அருளாளன்
பாதுக்கெனைவேண்டி யாகந்தனிலழைத்திர்
தீதற்ற இந்ராதி தேவர்களே நீதியுற்ற
விஷ்ணுவே. நான்முகனே வேண்டுவதென் கேளுங்கள்
கஷ்டமெவரூலே களருங்கள் இக்கணமே
தீர்ப்போமெனமிகுத்த தீரம் புகன்றிடவே
கார்ப்பாரிவிரெனவே கைக்குவித்து ஆர்ப்பரித்துப்
பணிந்து நமஸ்கரித்துப் பரமபதீ யென்றிரஞ்சித் [கும்
துணிந்திதைக்கேளுங்களெனச்சொல்கின்றார்முனிந்திலங்
இரணியன் சகோதரனும் இரணியாக்கன் புதல்வன்
தரணியெல்லாம் வெற்றிபெருந் தாஷ்டீகன் முரண்மிகுத்த
தந்தை யிருவரையுஞ் சங்கரித்தார் விஷ்ணுவென்றே
அந்தகா சூரனென்போ னாக்ரமித்தே விந்தையுரும்
அருபதக்ரோணி அரக்கர்படைக் கதிபன்
செருவில்மிகுத்ததிரச் சூரன் பெருமையுருந்
தேவேந்ர லோகமெல்லாந் தீரமுடன் கொள்ளையிட்டான்
தேவர்களை யெல்லாஞ் சினந்தடித்தான் மேலுமவன்
தேடித்திரிகின்றான் திருமாலைக் கொன்றிடவே
நாடிவந்தான் வைகுந்தம் நான்முகனார் யீடில்லா

மகாவிஷ்ணு பிர்மா வச்ருயுதத்தோன்
சுகானந்தங் காஞுஞ்சுரறெவருந் திகிலாகி
யாகஞ் செய்துங்கள் அனுமதியைக் கோறுகின்றோம்
ஏகாம்பரனே யெனப்புகன்ருர் வாகான
சூலாயுதபாணி சுரேந்திரனே அஞ்சாதீர்
காலனைப்போ லொத்த அந்தகாசூரன் பாலனுகிச்
சமர்பொருதி வெல்வோம் யாம் சந்தேகங்கொள்ளாதீர்
இமையவரே யென்றியம்ப இந்திரனும் அமர்விஜய
திருமாலுடனயனுந் தேவர்களுஞ் சூழ்ந்து வரப்
பிரிதீசன் சேனதிபனுகிக் கருமலைபோல்
அந்தகனைக் கண்டங் கவனருபதக் ரேணிச்
சொந்தவ சூர்ப்படையைச் சூழ்ந்துகொண்டார் கண்டசுரன்
அகப்பட்டீர் தேவர்களே யாகத்திலுற்பவித்தோன்
மிகத்திரத்தில்வல்லவன்போலெண்ணியன்றோபயத்தை
புரப்பட்டீரெங்கிருந்தீர் போருக்கோவந்தீர்கள் [விட்டு
பயப்பட்டோடாதீரெனப்புகன்றே புயந்தட்டிச்
சக்ரதறனெங்கே சமர்பொருத வாருமென்றே
கொக்கரித்துக்கோஷ்டமிட்டுக் கெர்ஜ்ஜித்தான் மக்கரக்கன்
சொல்விளம்பக் கேட்டுத் துயரமுற்ருர் தேவரெல்லாம்
வல்லவனுய்த்தோன்றும் பிரிதீசன் வில்வளைத்தே
அடடா அரக்கா நீ அமரரிடம் பேசாதே
திடமுடனே நாமெதிர்த்துச் சண்டைசெய்வோந் தொடடா
யுத்தமெனச் சொல்வி யொரு நொடிக்குள்ருக்கதன்மேல்
றத்தவெள்ளஞ்சோரக்கணை தொடுத்தான் அத்தனவன்
சரமாரிதூரியன்ஞேன் சதுரங்க சேனைகளைத்
திசைமாரியோடச்சிதறடித்தான் அசையாமல்
அந்தகனுங் கண்டுநின்றே ஆச்சரியங்கொண்டு சிவன்
வந்தனஞே அன்றியிவன் யாவனென்றே சந்தேகங்
கொண்டு நின்ருன் கண்டான் கொடுஞ்சூரன் முன்னேகிக்
கண்டுபிரிதீசன் களறுகின்ருன் நின்ருய் கேள்
அந்தகாசூரு பாரந்தோவுன் சேனைகளைச்
செந்தூளாய் செய்தேன் செருக்களத்தில் அந்தகனே
சண்டை செய்வாயுந்தன் சமர்த்தைக்காண்போமெனவே

விண்டையில்வேலொன்றையவன்மேலெரிந்தான் திண்டசுரன்
இரும்புலக்கையா லடித்தான் யெதிர்த்தபிரிதீசன் [கரக்கன்
நருக்கெனவோ றஸ்திரத்தால்த் துண்டித்தான் திருக்
கெதாயுதங் கூர்வாமுடனே கேடயமுங் கைபிடித்தே
விதவிதமாய்ப் பாய்ந்தெகிரிவிட்டெறிந்தான் அதமனவன்
விட்டபடைக் கலங்கள்மேலில் விழாமற்தடுத்தே
கிட்டிவந்தே அந்தகனைக் கேட்கின்ருன் மட்டடங்காத்
துஷ்டா யெதற்காய்ச்சுரரைச் சினந்தடித்தாய்
அஷ்டதிசைக்கதிபன் நீதானே கெட்டாய் நீ
என்ருேங்கிச் சூலாயுதத்தா லடித்தவனைக்
கொன்றேந்திச் செங்கதிருேன் முன்காட்டி முன்புகன்ற
இருள்வடிவா மந்தகனை யிரவிக்கிரை கொடுத்தான்
அருள்வடிவாய்த் தோன்றும் பிரிதீசன் பொருள்வடிவாம்
வுமையவளங்கண் தோன்றி வோகோ மகாதேவே
எமை விரும்பி அந்தகனை மீட்டுமென்றே அமைதியுடன்
என் கரத்திலுற்பவித்தானென்சே யிவனெனவே
தன்கரத்தை யேந்தித் தயங்கினள் சொர்னமொத்த
சூலாயுதமேந்தித் தோன்றிவந்தே வெற்றிபெரும்
வேலாயுதன்போற் பிரிதீசன் சாலச்
சிவகாமி விள்ளச்செவி சாய்த்துக்கேட்டே
சிவகணத்திற் சேர்கவென்றே சேர்த்தருளித் தவமோதுந்
தேவர்களை நோக்கி வுங்கள் சிந்தைமகிழ்ந்திடவே
பாவகனும் அந்தகனை மாற்றினேம் ஆவலுடன்
அவறவர்க ளின்விடுதிக்கன்புடனே செல்கவெனத்
தவநிதியாம் பிரிதீஸ்வரனியம்ப அரியயனுந்
தேவர் முனிவர்களுஞ் சித்தர்வித்யாதரரும்
மேவுமெழிற் தேவேந்திரன் முதலாம் யாவர்களும்
பிரிதீஸ்வரனுற் பிழைத்தோமெனப் புகன்றே
அறிவோதி ஆனந்தக்கூத்தாடி நெறிமிகுத்த
யாகத்திலுற்பவித்தே அந்தகனை மாற்றியெங்கள்
சோகந்த வர்க்கவந்த தோன்றலே மாமகுத்வ
வெற்றிப்ரதாபமுரும் வேந்தேவுன் கியாபகமாய்ச்
சுற்றுகடல் சூழும் புவியதனில் நற்றவஞ்சேர்

புத்திரப்பேர் வேண்டுகின்றோம் போர்வீரரேயதனுற்
சித்திரப்போன்றிலங்குந் தேவியுடன் இத்தரையில்
வாழ்ந்துனது வம்சம் வளம்பெருகச் செய்யுமென்றே
தாழ்ந்து புகன்றவரைத்தாம் நோக்கிச் சூழ்ந்திலங்கும்
விண்டுவே நான்முகனே விரும்புஞ் சுரேந்திரனே
அண்டத்தமரர்களே அவ்விதமே கண்டுய்மின்
யென்றியம்பக்கெந்தர்வ ஸ்ரீயாஞ் சுனுபை யம்பா
ளென்றவொருமாதை இவர்க்கெனவே மன்றலுருந்
திருமணமுஞ் செய்தே விசாலாவதி நகரைத்
திருமகுடஞ் சூட்டித் திருப்தியுற்றார் அருமையுடன்
மலர்மாரிதூவிமிக வாழ்த்தி மகாமூர்த்தியெனச்
சிலர்பேசிச் சென்னிதனிற் கைகூப்பிப் பலர்கூடிச்
சந்தோஷங் கொண்டாடிச் சகலர்களுஞ் சென்றார்கள்.
அந்தமிகுந்த பிரிதீசன் சுந்தரஞ்சேர்
மனைவியுடன் கூடிமிக மாக்ஷிமையாய் வாழ்ந்துவந்தான்
மனுநீதியொன்றும் வழுவாமல்க் கனிவுடனே
விசாலாவதி நகரை விமரிசையாய்க் காத்துகந்தான்
நிஜானந்தம் பூண்ட நியமத்தான் விஜயமுடன்
விடங்க த்யாகனென்றும் மிளிரும் மணிக்ரீவனென்றும்
அடங்காச்சுனு பனிந்ரசேனனென்றுந் திடம்பெறவே
நான்கு புதல்வர்களை நானிலத்திலீன்றவரை
மாண்பு தவறுமல் வளர்த்துவந்தான் ஆண்மையுள்ள
பிள்ளைகட்குக் கல்வி பிரபல்யமாய்ப் பயிற்றி
வல்ல கலைக்கோட்டு மகாமுனி பால்ச் செல்வர்களை
ஒப்பிவித்துத் தாங்கள் வுயர்ந்தகலை யிவற்கே
கற்பித்துக் காட்டுமெனவினவிச் சொற்பகரும்
பிரிதீஸ்வரன் சுதரைப் பிர்மரிஷி பார்த்துச்
சரிநன்கென மகிழ்ந்து சாற்றியே அறிவுதவக்
குமரர்களாம் நால்வர்களுங் குருதேவனைப் பணிந்தே
அமரர்குளாம் போற்றும் அதிபறிவர் விமரிசையாய்
நான்குவித வேதம் நவிலாறு சாஸ்திரங்கள்
காண்கும் அறுபத்துநான்குகலை மாண்பாம்
யானையேற்றம் புரவியேற்ற மனைத்தும் பயின்றே

மானதத்திலே சிறந்த வாலிபராய்த் த்யானமிகுஞ்
சற்குணராய்த் துஷ்டர்களைச் சங்கரிக்கவல்லவராய்ப்
பக்குவராய் வந்த பருவத்தே சற்குருவாம்
கலைக்கோட்டு மாமுனிவர் கருணைத் திருவருளால்
நிலையாய் விசாலாவதி நகரைத் தலைவரவர்
நீதிவழுவா நெறியுருஞ் செங்கோலோச்ச
ஆதிப்ரிதீசன் அனுக்ரகத்தால் க்யாதியாய்க்
கெந்தர்வ ராஜகுமாரிகளைக் கல்யாணம்
அந்தமுறச் செய்தே அகமகிழ்ந்தார் சொந்தமுரும்
விசாலாவதியை விடங்கர் முதல் நால்வர்
குசாலாக ஆழ்வாரெனத் தெரிந்தே பிரிதீசர்
மகுடாபிஷேகம் மைந்தருக்குச் சூட்டியே
கயிலாயஞ் சென்றார் கடவுளவர் அயிலேந்தும்
மன்னர்களாம் நால்வர் மனுமுறையை மாறாமல்
நன்னயமா யாக்ஷிசெய்தே நற்றவத்தால் முன்னவனும்
விடங்கத் தியாகனெனும் வேந்தனவனின்பமுற்றே
அடங்காமகிழ்வெய்தி யன்பாய்த் திடங்கருதி
ஆண்பாலர்களிருவர் பெண்பாலர்களிருவர்
மாண்பாக் யீன்றான் மகாராஜன் ஆண்மையுடன்
பின்புதித்த மூவர்களும் பேருக்கிரண்டு சுதர்
இன்புடனே பெற்றாரிரைவரிவர் முன்புகன்ற
நால்வர்களால் நாலிரண்டு பெட்டாணுடனிருபெண்
பால்யர்களாய்ப் பத்துப்பேர் சேர்ந்தார்கள் மேலுவர்
நாளுக்குநாள் வளர்ந்தே நல்லகலை பயின்றே
தோளுக்கிசைந்திலங்குந் தோளர்களாய் வாழ்வுருஞ்சீர்
கல்யாணஞ் செய்திடுமோர் காளைப்பிராயமுறச்
செல்வர்களின் தந்தையரும் நால்வர்களும் வல்லபமாய்
அரசாக்ஷி செய்துவந்தார் அமராபதி யிமையோர்
இரைவரிவர்களிட மேகிவந்தே மகாவீரப்
பிரிதீஸ்வரனீன்ற பிள்ளைகளாம் ராஜர்களே
கிரவுஞ்சத்தீவிலுள்ள ராக்கதர்கள் திரல்மிஞ்சுஞ்
சூரனென்றுந் தீரனென்றும் கோரனென்றும் மூன்றரக்கர்
சூரசேனைக் கதிபராய்த் தோன்றித் தோரணையாய்

அசுரருக்குந் தேவருக்கும் ஆதிப்பகைமையினல்
சமர்பொருதிக் கைதேர்ந்த வல்லரக்கர் பவுருஷமாய்ப்
பொன்னகரில் வந்தே புகுந்துலகைக் கொள்ளைகொண்டார்
அன்னவரை யங்கெதிர்ப்பாரின்றியே மன்னர்களே
வுங்கள்பிதா யெங்கட் குபகாரியான தினல்த்
தங்களிடம் வந்திதனைச் சாற்றுகின்றோம் யெங்கள்
சத்துருக்களைச் செயித்தே தர்க் கார்த்தருளுமென்றே
சித்தர் முனிவரெல்லாஞ் சேர்ந்துரைத்தார் அத்தருணம்
கேள்வியுற்ற நால்வர்களுங் சிலேசமுற்றுத்தேவர்களே
வாழ்வுமிக்க வுங்கள்மனம் பதரித் தாழ்மையுற்றே
என் சொன்னீரும்பர்களே எங்களைச் சோதிப்பதற்கோ
முன்வந்தீர்போலும் மொழிந்தீர்கள் விண்ணவரே
நீவிர்செய்யாக்காரியமோ நீ நிலத்தோர் செய்வார்கள்
மேவிவந்திங்கென் புகன்றீர் மேலவரே கேவலமோர்
அசுரவர்க்கத்தார்களுக்கோ அஞ்சிவந்தீ ரென்றார்கள்
புருஷசிங்கம் போன்றிலங்கும் போர்வீரர் வசனமதைக்
கேட்டாரிமையோர் கிரவுஞ்சருக்கதருல்
வாட்டமுற்றோர் சற்றே மனந்தெரித் தாஷ்டிகஞ்சேர்
மன்னர்களே கேளுங்கள் வானவர்க்குந் தானவர்க்கும்
முன்னமொரு விஷயத்தாற் பகையாம் பென்னவெனில்ச்
சாந்தகுரு வியாழன் சகோதரனுய்த் தோன்றிவந்தோன்
சாந்தமில்லா வேதங்களைப் பயின்றே ஆய்துணர்ந்த
சுக்கிருச்சாரியவன் தோளமையாந் தம்பியுடன்
தர்க்கமிட்டுத் தாம்செய் தபோபலத்தால் அக்ரமித்தே
சூரகுருவாகிச் சுருசுருப்பாய் ருக்கதர்க்கே
வீரமுரும் மந்திரங்களைப் பயிற்றி ஆரணஞ்சேர்
நான்முகனை நோக்கியவர் நன்றாய்த் தவம்புரியப்
பான்மை யுரைத்தவரைப் பண்பாக்கி நோன்பியற்ற
மலர்மேலவன் மகிழ்ந்தே வல்லரக்கர் முன்தோன்றிப்
வலம்பெறவே கோருமவுணர்காள் சிலவரங்கள்
தருவதற்கே வுங்கள் தவத்தில் வந்தோமென்றுரைத்தார்
கெருவமுற்ற ருக்ஷதர்கள் கேள்வியுற்றே அருட்பரவும்
புத்தேளே தேவர்களைப் போர்பொருதி வெல்வதற்கே

தக்கவரந்தாருமெனப் புகன்றே மெத்த மெத்தத்
தோத்திரஞ் செய்தேற்றிநின்ற சூரர்களை நான்முகத்தோன்
பார்த்திதனைச் சற்றே பகருகின்றான் கீர்த்திபெருஞ்
சுக்கிராச்சாரியரின் சொல்மாறாச் சீடர்களே
திக்கெட்டையுஞ் செயிக்குந் தீரர்களே வக்ரதந்த
றாக்கதரே நீங்கள் நம்மைத் துதித்ததினால்
நோக்கமுறுமுங்கள் மனோலயம்போல் நேர்த்தியுருந்
தேவர்களை யெல்லாஞ் ஜெயஞ்செய்வீரஞ்சாதீர்
மேவுமெழிற் சூராதி சூரர்களே ஆயுதங்கள்
இந்தாருமென்றியம்பி யீய்ந்தான் தகுந்தவரஞ்
செந்தாமலரைக் கமலத்திற் சிறந்தோன் அந்தமிகும்
பிர்மாதரும் வரத்தால்பிர சண்டமாருதம்போல்
தர்மாதர்மங்கள் கருதாமல் வர்ம்மமாய்ச்
சுக்கிராச்சாரியரின் தூண்டுதலாலவ்வசுரர்
அக்ரமமாய் வந்தெதிர்த்துச் சண்டைசெய்தார் அச்சமயந்
தாரணியில் வாழ்ந்திருந்த தார்வேந்தறானவர்கள்
சூரர்களை யாவரையுந் தும்சித்தே சீரணியுந்
தேவர்களை யாதரித்தார் செப்புதுங்கேளுங்கள் தந்தை
பூவுலகில் வந்தவிதம் புகல்வோம் ஆவலுடன்
கேட்பீரதிபர்களே கிரேதாயுகத்தினிலே
மேற்புகன்ற சூரர்களைப் போன்றொருவன் ஆக்ரமஞ்சேர்
அந்தகா சூரனென்போ னருபதக்றோணிப்படையோ
டெங்களைமுன் தாக்கியவ னிம்சித்தான் அங்கணவன்
வல்லபத்தைக்கண்டே மரைந்தோடி மாக்ஷிமையாய்
வல்லசுரச் சேனைகளை மாய்ப்பதற்கே நல்மகமாம்
யாகஞ்செய்தோமதனில் அற்புதமாயுங்கள் பிதா
யேகாம்பரேஸ்வரனைப் போன்றுதித்தே பாவகஞ்சேர்
சூறாதி சூரர்களைத் தும்சித்தே வெற்றிபெற்றார்
வீறாதி வீரப்பிரிதீசன் நேர்மைகண்ட
நாங்களவரை நயந்து பணிந்துகந்தே
தாங்களிந்தத் தாரணியிற் கோலோச்சி யாம் கருதுங்
கியாபகமாய் மைந்தர்களைச் சந்ததியாகப் பெருவீர்
நியாயபரிபாலனரே யென்றியம்பி நேயமுடன்

காசிநகரைக் கனகமுடி புனைந்தே
நேசவிசுவாசமுறும் நேர்த்தியாய்த் தேசுலவுங்
கெந்தருவர் வர்க்கத்தி னிற்பிறந்த பெண்மணியைச்
சுந்தரமாய்க் கல்யாணஞ் செய்துகந்தோம் அந்தமுள்ள
பிரிதீஸ்வர னுதவும் பிள்ளைகளே நீங்கள்
குறிகண்டுகொள்ளாதென் கூறினீர் அறிவுணர்ந்த
வேந்தர்களே வுங்கள் தந்தை வீரியத்தைப்போன் றுகந்த
மாந்தர்களே மானிலத்து மன்னர்களே ஆண்மையுற்ற
கிரவுஞ்சத்தீவிற் கெருவமுள்ள ருக்கதரை
அரைநொடியிற் சென்று அதமாக்குவீர் திரமிகுத்த
வீராதி வீரர்களே விண்ணோர்க்குகந்தவரே
சூராதி சூரர்களைத் துண்டிப்பீர் பாருதி
அண்டமெல்லாங் கார்க்கவந்த ஆதிப்ரிதீசன்
சொந்தப் புதல்வர்களாந் தோன்றல்களே யென்றியம்ப
நால்வர்களாம் மேலவர்கள் நல்லதெனச் சம்மதித்தே
நால்வகையாஞ் சேனையுடனேகி மேல்விளம்புங்
கிரவுஞ் சத்தீவினிலே கீர்த்தியுடன் சென்றங்கண்
திரமிஞ்சுஞ்சூரர்களாம் மூவரக்கர் வுரமிஞ்சுஞ்
சதுரங்க சேனைகளாம் சண்டாளருக்ஷகக்ஷதரை
எதிர்த்தடித்துப்போர் பொருதிக் கெர்ஜ்ஜித்தார் கதித்தசுரர்
விடங்கத் தியாகருடன் மேவுமெழில் மூவரையுந்
திடமுடனே வந்தெதிர்த்துப் போர்புரிந்தே அடமுடனே
தேவர்களின் வேண்டுதலாற் செருச்செய்ய வந்தவரே
தேவர்களுக்காக வந்தவுங்களையுந் தேவரையும்
இப்பொழுதேகொன்று தின்போமென்றெதிர்தேமூன் றரக்கர்
கைப்பிடித்த ஆயுதங்களாலெறிந்தார் அப்பொழுதே
வில்லைக்குணத் தொணித்த வீராதி வீரரிவர்
சொல்லிவாய் மூடுமுன்பே சூரர்களை வல்லவர்கள்
சமர்பொருதி மூவரையுஞ் சங்கரித்தே வெற்றியுற்றார்
அமரர்குழாங்க ளகமகிழ்ந்தார் இமையவரை
நான் கரையர் கண்டே நமஸ்கரித்துச் சொல்லுகின்றார்
மேன்மையுள்ள விக்ரமஞ்சேர்விண்ணவரே தாண்மையின்றிப்
பொன்னகரிற் சென்றிருங்கள் போய்வருகின்றோ மினிமேல்

இன்னமெவரேனு மெதிப்பாரேல் அன்னவரை
வெல்வோம் நீரஞ்சாதீர் மேலுலகில் வாழ்பவரே
நல்லகுணம் பரவும் ஞானிகளே செல்வமிகுஞ்
சம்ரமஞ்சேரிங்கிதரே சரணஞ்சரணமென்றே
வும்பர்களைத் தோத்திரஞ்செய்தே தொழுதார் அன்பர்களின்
வணக்கமதற்கிணங்கி வானவர்கள் யாவர்களும்
இணக்கமுட னிவ்வார்த்தை யோதுகின்றார் கணத்தினிலே
சூரர்களாம் மூவரையுந் துணையான சேனையையும்
வீரர்களே வென்றீர் மிக நன்றே பார்தனிலே
பிரிதீஸ்வரன்போன்றே பேறெடுத்தீர் மன்னர்களே
நெரிசார்ந்திலங்கு மெழில் நேயரே அரிவார்ந்த
எங்கள் குளாங்கட்கிடையூர் தவிர்த்தமையா
லுங்கள்குலஞ் செழிக்கு மிவ்வுலகில்த் தங்கள்
தயவிருக்கவேண்டுமென்றே சாற்றியாசீர்வதித்தே
இமையவர்கள் சென்றாரவருலகம் அரையர்களும்
நான்குவிதச்சேனை சையினியங்களோடுகந்தே
பான்மையுறுங் காசி நகர் சேர்ந்தார் மேன்மையுள்ள
புத்திரர்க ளெண்மருக்கும் பெண்களிருவருக்குஞ்
சித்திரமாய்க் கல்யாணஞ் செய்திடவே சித்தமுற்றோர்
நகரை யலங்கரித்தார் நாலுதிசை ராஜருக்கும்
லிகிதமனுப்பிவைத்தே நேர்மையாய்த் தகமையுறுங்
கெந்திருவர் வங்கிஷத்தில்க் கீர்த்தியுடன் சம்பந்தம்
விந்தையுடன் செய்தேமிக மகிழ்ந்தார் சுந்தரஞ்சேர்
விசாலாவதி நகரை விகசிதமாயாக்ஷிசெய்தே
குசாலாக வுள்ளங் குதூகலித்தார் திசையரசர் [யாய்த்
எண்மர்க்களுஞ் சேர்ந்தொருங்கே யிங்கிலங்கும் பாவனை
திண்புயஞ்சேர் வீரத்திரமுடையார் பண்புகட்டும்
எட்டுப்பெயரு மிவர்க்கினிய மைத்துனரும்
மட்டுப்படாதுயர்ந்த மன்னர்களாய் யெத்திக்குங்
கீர்த்திமிகுத்தோங்கிக் கெவர்த்தியுடன் வாழ்ந்துவந்தார்
பூர்த்திபெரும் புத்திரப் பேரின்மையினால்க் கார்த்தருளுங்
கலைக்கோட்டு மாமுனியைக் கண்டே நமஸ்கரித்துக்
கலைஞானமோதும் மகாரிஷியே நிலையான

ஞானகுருதேவே நமஸ்காரம் நாங்களிந்த
நானிலத்தை யாண்டிருந்தும் நற்பயனென் கியானமிகும்
மக்களின்றிவந்தோம் மகா ரிஷியே யென்றார்கள்
அக்கணமே அன்பர்க்கருள்புரியும் பக்குவறாங்
கலைக்கோட்டார் கண்டுடனே கஞ்சிகாமாக்ஷியம்மை
மலையரையன் பெற்ற மடந்தை நிலையுதவும்
யாகமொன்று செய்தார்கள் அம்பிகையாளங்குகந்தே
மோகமுறுங்கோ வேந்தர்முன் தோன்றிச் சோகமறப்
புத்திர பாக்கியந் தருவோம் புதல்வர்களே யென்றியம்பிச்
சத்தியுமை கௌமாரி தான்மறைந்தாள் அத்தருணங்
கலைமாமுனிவன் கழற்சேவடி பணிந்தார்
சிலைவிஜயன்போன்ற திரமுள்ளார் கலைமுனியே
புத்திரப் பேறுற்றோம் யாம்போய் வருகின்றோமெனவே
சத்திய சன்மார்க்கமுறுஞ் சற்குருவாம் முத்தறவர்
ஆசீர்வதித்தனுப்பி ஆனந்தமுற்றிருந்தார்
நேசானு பூதிபெறும் நித்தியறாம் றாஜறிவர்
தமதுநகர்கேகி வெகு சந்தோஷ முற்றிருந்தார்
இமையவருக்கின்பியற்றுமின்பத்தார் நமதுகுல
தேவி காமாக்ஷியம்மன் செப்புமொழி தப்பாமல்
ஆவிக்கினிய அருமையாய் வோவியம்போல்
யெண்மருக்குமீறெண்பதினாறு புத்திரரும்
பெண்களிருவருக்கும் மிருநான்கு ஆண்மகவும்
அவதரிக்கக் கண்டவர்கள் அன்னைபிதாமுன்னவர்கள்
மிகமகிழ்ச்சிகொண்டிவரை மென்மேலுஞ் சுகவளர்ச்சி
யாகவளர்த்தவர்களைந்துவய தாருவய
தாமளவிற் பலகலையுந்தாம் பயிலும் மோகமுடன்
பள்ளிதனில்விட்டுப் படிக்கவைத்துப் பால்யர்களைத்
தெள்ளுதமிழ் கற்றிலங்கச் செய்தார்கள் செல்வறவர்
நான்குவேதம் ஆறு சாஸ்திரமுங் கற்றினிய
பான்மைமிகும் வில்வித்தையுங் கற்றுத் தாண்மையில்லா
வாலிபறாய் வந்தவயதறிந்தே கெந்தருவர்
சீலிகளாகத்திகழுஞ்செல்விகளைத் தாலிகட்டக்
காமாக்ஷியைக் கருதிக் காதலுடன் தோத்தரித்தார்

சீமான்கள் மெச்சுந்திரமுடையார் மாமகிழ்ச்சி
கொண்டுமைமையைக்கோறிநின்ற கோவேந்தர் முன்தோன்றி
அண்டர்புகழ் மன்னர்களே ஆனந்தம் பென்றுமையாங்
காமாக்ஷி கண்டுடனே கல்யாணஞ் செய்யுமென்றே
பாமாட்சிகூறும் பசும்பொன்னால் மாமாட்சி
கின்னிப்பொட்டென்றுரைக்குங் கீர்த்தியுள்ள தாலியிதாம்
கன்னியமாய்க் கட்டுங்க ளென்றியம்பிப் புண்யவதி
தந்தாள் புதுத்தாலி சந்தோஷமுற்றிவர்கள்
சிந்தைமகிழ்வெய்தித் திருவருள்செய் அம்பிகையாங்
காமாட்சியம்மன் கருணையினுற் தாலிகட்டி
மாமகிழ்ச்சியாயுமையை வர்ணித்தார் சீமாட்டி
இருபத்தினன்குமனையார்களுஞ் சிறந்தே
இருபத்திநான்கு ரிஷிகோத்திரமாய்ப் பெருகுதற்கே
பிரபோதயன் சுப்ரதீபனெடு மற்கடவன்
தரமாக மூவர்களைத் தாம்நோக்கித் திரமாகக்
கஞ்சிகாமாட்சியம்மன் காதலித்தே கச்சிநகர்
தென்காஞ்சி கச்சிமுதற் தேசமெல்லாம் றஞ்சிதமாய்க்
காக்கக்கடவீர் கடாட்சிப்போ மென்றியம்பித்
தீர்க்கமிகுத்தொளிருந் தேவியுமை பார்க்குள்
காஞ்சிபுரமென்றிலங்குங் கச்சிநகரதனை
வாஞ்சையுடனுளும் வரஞ்சாற்றிக் காஞ்சனையாள்
கரத்தால்முடிசூடிக் கருணையினல் வாழ்கவென்றே
திரத்தாற் புகன்றுள் சிவகாமி வுரைத்தவுடன்
வந்திருந்ததேவர் மகாரிஷிகள் மாமுனிவர்
சந்தோஷங்கொண்டா சிதாம்கூறி அந்தறமாய்
மறைந்தார்கள் தேசமகா ருஜருஜாக்கள்
நிறைந்திருந்தோர் யாவர்களும் நேசித்தே திரம்பெருஞ்சீர்
மூன்றுமுடி சூடிநின்ற மும்முடியார் முன்புகந்தே
சார்ந்தினிமையான தயவுரைத்துப் பேர்தங்
கவறவர்கள் தேயங்களிற் சேகிவாழ்ந்திருந்தார்
தவமகிமை சார்ந்திலங்கும் மும்முடியார் சுபகறமாய்த்
தேவியுமை விளம்புந் தென்காஞ்சி கச்சிநகர்
பூவினுயர்காசியெனுந் தேசமெல்லாம் ஆவலுடன்

பரிபாலனம்புரிந்தே பண்பாகவாழ்ந்துவந்தார்
நெறியோடுகந்த நியமித்தார்=செறிவுருஞ்சீர்
சோழமகாராஜன் வெகுகுதூசெய்தான் வெற்றிபெற்றார்
மீழவும்பெண்வேண்டுமென்றே மேலோனும்=தாழ்ந்துவந்தே
இருபத்திநான்கு மனையார்களிலொருவர்
திருமைக்கியன்ற கிரிகைசெய்தே=தருணத்தில்
ஓர் வரந்தந்தாள்வீர் வும்மையன்றியார்தருவார்
சீர்பொருந்துஞ்சீமானே யென்றியம்பும்=நேர்மைகண்ட
மேலவனுஞ்சோழ மகாராஜாவே கேளெனக்குச்
சாலவுபசரித்த தன்மையினால்=ஞாலமதில்
யென்னாலியன்றவரம் இப்பொழுதேதந்திடுவேன்
சொன்னாற்சரிதானெனப் புகன்றான் மன்னனவன்
கைபோட்டுத்தந்தால் களறுவேனென்றியம்ப
மெய்காட்டும்நெஞ்சகனும் மேலவனும்= ஆய்திகமாய்
கேள்க்கும்வரந்தருவேன் கேளுமெனக்கைபோட்டான்
கோள்நெஞ்சங்கொண்டுகந்த கோவேந்தன்=தாழ்பணிந்தே
வுங்களதுவங்கிசத்தில் வோர்பெண் தரல்வேண்டும்
தங்களதுசந்ததியின் சார்பாக=யெங்கள்
குலமுஞ்சிறக்கக் குதூகலமாய்ப் பெண்தாரும்
நிலமெங்கினும்புகழும் நேர்மையீர்=நலமுதவு
மென்றானதைக்கேட்டிருசெவியிற் கைபுதைத்தே
நின்றான்தருகிறதாய் நேர்புகன்றே=னென்றாலும்
மற்றையவர்க்கொப்பா வரமன்றோ தந்துவிட்டேடா
சொற்றவரினாலும் வருந்தோஷமென்றே=கற்பிதமாய்ப்
பெண்தருவேன்வாரும் பிரளேனென்வாய்மையென்றே
தண்மையுடன்சொல்லித் தழுவியே=வண்மைமிகுந்
தேசாதிகாரச் சிறப்பமைந்த நம்மினத்தார்
வாசமுருந்தலத்தில் வந்துகந்தே=நேசமிகும்
அருமைச்சகோதரரே அன்பார்ந்த மைத்துனரே
விருந்தழைத்துச்சென்றிருந்தான் சோளியர்கோன்= அருந்தி
தாம்பூலந்தந்தான் யான்சந்தோஷங் கொண்டேன்பின் [யதுங்
வீம்புடனேவோர்வரத்தை வேண்டினான்=யாம்தருவோம்

சொல்லுமென்றேன்கைபோட்டால் சொல்வேனெனப்புகன்
நல்லதெனக்கைபோட்டே நான்கேட்கப்=புல்லனவன் [றான்
பெண்வேண்டுமென்றே பிரியமுடனேவிளம்பி
நண்பாகக்கேட்டிடயானென்சொல்கேன்=வுண்மைமொழி
தவறாமல்ப்பெண்தருவேன் சந்தோஷமாய்வருவீர்
புவிராஜர்போற்றுமெழிற்பூமானே=பவுருடனே
கலியாணஞ்செய்யக் கருதிவருவீரெனவே
சலியாமல்ச்சொல்லிவந்தேன் தற்சமயம்=நலியாமல்க்
காமாக்ஷியைத்தொழுவோங் கார்ப்பாளெனக்கனிந்தே
பூமாக்ஷிமேவுமெழிற் பூமான்கள்=காமாக்ஷி
யெங்கள்குலத்திற் கிளிவுதவா தாளுமன்றி
யெங்களுயிர் தரியோமென்றியம்பிச்=செங்கரத்தில்
வாழேந்திவீசியவர் மாய்வதற்குள் மாதேவி
மாழாதிர்மைந்தர்களே மாக்ஷியிதாம்=சோழனுக்காய்ப்
பொற்பதுமைசெய்திரேல்ப் பெண்ணைச்செய்திடுவேன்
அற்புதமாய்க் கல்யாணஞ்செய்திடுவீர்=சொற்றவளு
மன்னர்களேயென்றவரை வாழ்த்தினள் மாதேவி
சொன்னவுடன் பொற்பதுமை செய்துவைத்தார்-வுன்னதமா
யுமையாளுயிர்கொடுத்தா ளுச்சிதமாய்ப்பெண்மணியுந்
தகதகெனத்தேகம் வளர்ந்தோங்கி=விகசிதமாய்ப்
பெண்ணணங்கைப்போன்றிருந்தாள் பிதாமார்கள்சந்தோஷங்
கொண்டுமையக்கோறிக் குதூகலித்தார்=வுண்மையுள்ளோர்
சோழமகராஜனுக்காய் தோன்றியபெண்ணோடுகந்தே
வாழுமிடஞ்சேர்ந்தார் மனையார்கள்=சோழமன்னன்
கல்யாணஞ்செய்வதற்கே கண்ணியமாயங்குவந்தான்
சொல்வார்த்தைமாறு மூவேண்மர்களும்=நல்லதென்றே
மனமகிழ்ச்சியாய்ப் பொன்மகளை யவனின்புறவே
மணமுடித்துக்கூட்டி யனுப்பிவைத்தார்=வினவுமந்த
மன்னனவன்பல்லக்கில் வைத்தேகித்தன்தேசம்
நன்னயமாய்ச்சென்றன்றே நாடியே=தென்னவர்கோன்
பாண்டிமகாராஜர்களின் பண்பார்ந்த பெண்மணிகள்
மீண்டுமிவட்கொவ்வாரெனவியந்தே=வேண்டுமெந்தன்
தேவியிவள்மிகுந்த சிங்காரியென்றனைக்கான்

மேவுமெழிற்பாவை விமரிசையாய்த் = தாவியொன்றும்
பேசாதசையாது பிரியமியற்றிருக்க
கூசாமற் கைபிடித்த கோவானோன் = மோசமெனக்
கண்டானவனிரண்டு கண்ணிற்பொரிபறக்கக்
கொண்டான் கடுங்கோபங் கொண்டுடனே = பெண்டெனவே
பொன்னாற்பதுமைசெய்தே புதுவதுவை செய்தேய்த்தார்
மன்னாதிமன்னர்கள் மூவெண்மறையும் = அன்னவர்கள்
தண்டுதளமென்றியம்புஞ் சதுரங்கசேனையையும்
வென்றுஜெயம்பூண்டு விகசிதமாய் = இன்றுகந்த
பெண்ணொருத்திக்காயவர்கள்பெண்களையெல்லாங்கவர்வேன்
திண்ணமெனச் சபர்தஞ்செப்பியே = மன்னவன்றன்
சேனைக்கதிபர் திரள்வீரர்சூழ்ந்துவற
யானையின்மேல்ச்சண்டை முறசறைந்தே = சேனைகளைத்
திரட்டிவழிதுடர்ந்தே ஜெயபேரிகைமுளக்கித்
திருக்கச்சியூர்க்கருகே சேர்ந்தார்கள் = செருக்கிரஞ்சேர்
மும்முடியார்சண்டை முரசதிர்வதேதெனவே
தம்மரண்மனைச் சிகரமீதேரிக் = கண்களினாற்
கண்டார்கள் சோழமகாராஜனது சேனையென்றே
விண்டார்கள் சண்டைமுரசறைந்தே = தண்டுதளம்
யாவரையுஞ் சேர்த்தொருங்கே ஆக்ரமித்தே வந்தெதிர்த்தார்
மூவெண்மரென்றியம்பும் மும்முடியார் = சோழனவன்
வில்வளைத்துச்சண்டை விளைத்தான்மூவெண்மர்களும்
வல்லபமாய்வில்லைக் குணத்தொணித்தே = வில்லிற்
சரந்தொடுத்தார் சிற்சிலர்கள் சமர்த்துடனே வாளேந்தி
விரைந்துவந்தே சோழமன்னன் சேனைகளை = இரண்டிரண்டு
துண்டுகளாய்வெட்டித்துணித்தே நிர்தூளிசெய்தார்
கண்டுநின்றசோழன் களறுகின்றான் = பண்டுன்பால்ப்
பெண்வேண்டுமென்றே பிரியமுடன் யான்கேட்க
நன்கென்றியம்பியொரு பொற்பதுமைப் = பெண்மணியைக்
கல்யாணஞ்செய்துதந்தீர் கண்டேன் கபடமென்றே
வல்லபமாய்ச்சண்டையிடவந்தேன்யான் = தொல்வினையால்ச்
சண்டைசெய்துந்தோர்த்தேன் சதுரங்கச்சேனைகளை
விண்டுலகஞ்சேர்த்தீர் விளம்புவேன் = பெண்டிடன்பால்

யான்மிகுதிவைத்திருந்த ஆசையனைத்துங்கெடுத்தீர்
பான்மையறிந்தணரும் பண்புள்ளீர் = ஆண்மையுள்ள
வல்லவரேவுங்களது வங்கிசத்துப் பெண்களெல்லாம்
நல்லவழகுள்ளவர்களென் றல்லோ = மெல்லியர்மேல்க்
காதலுற்றேன்கண்டுங் கபடமன்றோசெய்தீர்கள்
ஆதலினாற்சாபமிடுவதைக்கேள் = பூதலத்தில்
வுங்கள்குலப்பெண்கட் குகந்த வஜீகரங்கள்
மங்கவென்றோர்சாபம் வளங்கினான் = அங்கணவன்
சாபமிடக்கண்டார்கள் சாதிகுலராஜாக்கள்
கோபமுற்றேவுங்கள் குலமினிமேல்ப் = பூதலத்திற்
சந்தானவிர்த்தியின்றித் தாழ்கவெனச் சாபமிட்டார்
சிந்தாமணிநிகர்த்த சீமான்கள் = தொந்தித்தே
மறுசாபமிட்டு வருவதற்குட்கூடவந்த
மிருகக்களைப்போற் சிலநாய்கள் = அருகிருக்கும்
அரண்மனைக்கேஓடிவா அங்கிருந்தமாதரெல்லாம்
விரன்மிகுத்த சோழனன்றோ வெற்றிபெற்றான் = அரைநொடிக்குள்
வந்திடுவானிங்கணவன் வருவதற்குள்மாய்ந்திடுவோம் [க்குள்
பந்துவர்க்கமாய்ச்சிறந்த பாவையரே = யென்றெழுந்தே
சந்தனக்கட்டைத்தணலி லனைவர்களும்
விந்தையிதுவென்றே விழுந்தார்கள் = வேந்தர்களுஞ்
சோழனுடன்வாதாடிச் சொந்தமனை வந்தார்கள்
வாழுமரண்மனையில் மங்கையர்கள் = செந்தணலில்
வீழ்ந்திறந்தாரென்றே வியப்புடனே கண்டார்கள்
சூழ்ந்திலங்குந்தேசாதி ராஜாக்கள் = வாழ்ந்திலங்குங்
கஞ்சிகாமாக்ஷியம்மை காப்பாளெனக்கருதி
விஞ்சைக்கிசைந்த விரல்வீரர் = காஞ்சனையாள்
சன்னிதியிற்சென்றே சரணமெனப்பணிந்தே
மன்னவர்கள்கூடி வழுத்துகின்றார் = வுன்னதஞ்சேர்
கச்சிநகர்காமாக்ஷி கார்த்தாண்டருள்புரிவாய்
யிச்சைக்கிசைந்திலங்குந் தேவியர்கள் = அச்சமின்றி
நெருப்பிற்குதித்தார்கள் நீயுகந்துகார்த்திடிலோ
விருப்புற்றேநாங்களிதோ வீழ்ந்திடுவோம் = பருப்பதத்தி
யென்றிவர்கள்வீழ்க யெழுந்தார்கள்மாதேவி

வென்றிபெரும்வீரர்களே வீழாதீர்=நன்றுதவும்
பெண்களைமுன்போன்றே பிறப்பிப்போமென்றியம்பிக்
கண்களிமைக்குமுன்பே காக்ஷியாய்ப்=பெண்கள்
நெருப்பிற்பிறந்துவரும் நேர்மையைப்போல் வந்திடவே
திருக்கருணைசெய்தே சிவகாமி=அருட்பரவும்
மைந்தர்களேவுங்கள் மனைவியரைச்சேர்ந்தினிமேல்ச்
சுந்தரமாய்வாழ்ந்தே சுகியுமென்றே=அந்தரியா
ளென்றுமளியாத்தாலி யென்றிவரை வாழ்த்தியே
சென்றாள்சிவன்மகிழுந் தேவியாள்=அன்றிருந்தே
இருபத்திநான்கு மனையரர்களென்றெவரும்
பெருமைப்ரபாகரமாய்ப்பேசுமிவர்=விருதுபெற்ற
சேரமகாராஜாவின் தேசங்களிற்கேகித்
தீரமுடன்வியாபாரஞ் செய்வதற்கே=தாரணியும்
இருபத்தினான்கு மனையார்களிற்சிலரை
வரவழைத்தே முத்துமணிகொடுத்து=நிருணயித்த
சேரனாடேகி விலைசெய்து வருவீரெனவே
வீரமாதேவியருள் மேன்மையினால்ச்=சீராகுஞ்
செம்பவளம்முத்துஞ் சிறந்தநவமணியுந்
தெம்புடனே செம்புரவிமீதேற்றி=நம்பினத்தார்
நாலைந்துபேர்விரைந்தே நாம்புகன்றநாடேகி
வாலாயம்போல் வர்த்தகஞ்செய்தார்=கோலேந்தும்
இறைவன்வரிகேட்க இல்லையென்றார்சேரன்
முரண்மிகுத்தே முன்னோர்களைமோதிச்=சிறையிலிட்டுத்
தேசாதிராஜருக்கோர் செய்தியெழுதுகின்றான்
ராஜாதிராஜர்களே கேளுங்கள்=நேசமுடன்
வியாபாரஞ்செய்யவந்த வேந்தரிரைவர்வரி
தகறாலார்ச் சண்டையிட்டே தர்க்கித்தார்=பவுறாகச்
சிறையிலடைத்தன்னோர் திரவியத்தைச் சூறையிட்டேன்
அரசுரிமைவாய்ந்த அதிபரே=திரமிருந்தால்ச
சமர்பொருதவாருமன்றித் தரணிவரிதாரும்
அமரில் மிகுத்தொளிரும் ஆண்மையீர்=இமையில்ப்
பதிலுரையுமென்றெழுதப் பார்த்தார்கள் மும்முடியார்
அதிபதியாஞ்சேரனது கெர்வத்தை யிதுதகியே

அடக்கிவருவோமலது ஆதியில் நம்முன்னோர்
திடத்திற்கிழிவாமெனப் புகன்றே=படபடத்துச்
சதுரங்கச்சேனையுடன் தார்ஷ்டிகமாய்ச்சேரன்
பிதிர்கலங்கச் சிங்கக்கொடிநாட்டி=அதிர தருஞ்
சமர தருஞ்சூழச் ஜெயபேரிகைமுளக்கி
வுலைமலையமனதிலெண்ணி வுச்சிதமாய்=நிலைமையில்
வந்தெதிர்த்தார்சேரன் மிகவல்லபமாய்ச் சண்டைசெய்யத்
தண்டுதளங்களுக்குச் சாற்றியே=மீண்டுமவன்
தேரேரிவந்தான்முன் தேசாதிராஜாக்கள்
வீரியமாய்ச்சண்டைசெய்தே வெற்றிசெய்தார்=தாரேறுஞ்
சேரன்சிறைவகித்த தேசாதிவர்த்தகரைப்
பேரன்புடன்மீட்டிப் பின்னுமிவர்=வீரர்களே
நம்மைவரிகேட்டயிந்த நாட்டிறைவனைச்செயித்தோம்
செம்மையுருஞ் சேரநாட்டெல்லையெல்லாம்=நம்மதென்றே
வொருமித்தரசாண்டுலகந்தனிற் சிறந்தே
அருமையுடன்வாழ்ந்த மனையாரைத்=தருணத்தில்
மகமதியர்வர்க்கத்தில் வந்தநவாப் சைதுல்லா
மிகவலிமையோடெதிர்த்தே வெற்றியுற்றான்=யுகவலியால்த்
தேசாதியென்றோர் திருப்பேர் முடிசூடித்
தாசானுதாசர்களாய்ச் சஞ்சரித்தே=நேசர்களா
யெந்நகர்களினு மின்பமுற்றிற வியாபாரஞ்
சொந்தமெனச்செய்துலவுஞ் செட்டிமக்கள்=சுந்தரஞ்சேர்
சவுரிமலைமருவுஞ் சாத்தாவுருயனையுங்
கவுரிகஞ்சிகாமாக்ஷியம்மனையுந்=தகைமருவுந்
தெய்வமெனக் கைதொழுதே சீமான்களாயுலவும்
மெய்யர்களாம் நம்மினத்தார்=மேவியே வையகத்தில்த்
தென்னிந்தியாவினிலே சென்னைப்பதிதனிலே
வுன்னதமாய்வாழ்ந்திங் குலவுகின்றார்=அன்னவர்கள்
பண்பினிய வர்த்தகங்கள் பற்பலவுஞ் செய்தினிய
நண்பினருக்கின்பியற்றி நானிலத்தில்ப்=பண்புறவே
மாடகூடம்பொருந்தும் மணிமாளிகையுடனே
ஆடம்பரம்பொருந்து மன்பாகித்=தேடுகின்ற
பொன்பொருளுந் தங்கநகை.போகசௌபாக்யமிக

அன்பருளுங் காமாக்ஷியம்மையருல்த் = தெம்புதவுங்
கல்விநயஞ்சொல்வினயங் கனதனஞ்சேர் நாணயங்கள்
செல்வியருள்செய்யச் செழித்தோங்கிப் = பல்வளஞ்சேர்
தென்மதுரைஜில்லா. திருச்சிநகர் தென்காஞ்சி
இன்னுஞ்சிலநகரமெங்கினிலுஞ் = சென்னையிலும்
திகழ்ந்திலங்கிடுந் தெலுங்கத் தேசாதிச்செட்டிமக்கள்
மகிழ்ந்துவடநாட்டில் வனப்பியற்றித் = தகுந்திலங்கும்
ஆப்தர்க்கினிதருளி அக்ரயித்தோரைச்செயித்துக்
கார்க்குந்திருமால் கடாக்ஷியத்தால் = யார்க்கும்
மனதிற்கினிய மகிழ்வியற்றி மாணிலத்தில்க்
கனிவுற்றிலங்குங் கனவான்கள் = ஜனங்களிவர்
நல்லவர்களென்றியம்ப நாற்றிசையும் பேரெடுத்த
வல்லவரும் காமாக்ஷிமாதவத்தார் = இல்வளஞ்சேர்
தானந்தவந்தருமந் தயவுதாக்ஷண்யமெனும்
ஞானஞ்சிறந்திலங்கும் நன்பினராம் = மானதர்கள்
நம்மவர்கள் நாமவர்கள் நற்குலத்திலுற்பவித்துந்
தம்மையுணருமலன்றோ சஞ்சரித்தோம் = செம்மையருள்
வேதகீதம்பாவி மேவுந்தமிழ்க்கிளியே
நீதயவாய்க்கேளுமிங்கோர் நீதியிதாம் = தோதெனவே
சொல்விளம்பக் கேளுலகிற் சுகதுக்கம் யாவருக்கும்
வல்லவனால் வந்தமையும் வாழ்வன்றோ = செல்வமிகுஞ்
சீமான்களாகிய நம்தேசாதி ருஜவர்க்கப்
பூமான்களின்சமூகம் போய்நின்றே = நாம்புகன்ற
ஞானவிநோதம் நவிலுமிளங்கிளியே
தானதவஞ்சார்ந்திலங்குந் தத்தையே = மானதஞ்சேர்
பஞ்சரமே அஞ்சுகமே பச்சைப்பசுங்கிளியே
செஞ்சொல்பயிற்றுஞ் சினேகிதனே = றஞ்சிதஞ்சேர்
தூதுவனேதுங்கமுள்ள சொற்சுவையைக் கற்றிலங்கும்
மாதவனேசற்றே மகிழ்ந்திதைக்கேள் = யாதெனிலோ

செல்வர்க்கழகு செழுங்கிளையைத் தாங்குதலாம்
நல்வர்க்கந்தன்னில்வரும் நண்பர்களே=சொல்லியல்சேர்
யெங்கள்கவியரையன் இன்புற்றே யென்னிடத்தில்த்
தங்களிடஞ்சொல்ல யெனைத்தூ தாக்கி=மங்களஞ்சேர்
காமாக்ஷியம்மன் கருணை தனைக்கருதிப்
பூமாக்ஷி மேவும் பொருள்வேண்டிப்=பாமாக்ஷி
கூருமின்பங்கோறுங் குலத்தாரனை வருக்குஞ்
சீருடனேசெப்புக் கிடமுரைத்தான்= ஆறுமுகன்
கந்தன்குகன்கடம்பன் கானமயில் வீரனென்றே
சந்ததமும்போற்றுமெழிற் சாஸ்திரத்தான்=அந்தமிகுஞ்
சிங்காரவேலைய தேசிகருயன் சிஷியன்
மங்களமாயுங்கள் குலம்வாழ்நத்= துங்கமுருஞ்
செந்தமிழாற் சொல்விளம்பித் தேற்றிவிட்டான் சீர்திகழுஞ்
விந்தையிதைச்சற்றே வினவிக்கேள்=சந்தமிகும்
வேதம்புராணம் விரிகலைகளாகமங்கள்
நீதம்பலபுகலும் நேமத்தான்=காதலுற்றே
வெள்ளைச்சாமிப்புலவன் வேண்டிவிடுந்தூ தனைப்போற்
கிள்ளைமொழிவிளம்புங் கிஞ்சுகமே=தெள்ளுதமிழ்
ஞானசிகாமணியே நாகரீகம்பெருகும்
மோனமணிவிளக்கே முச்சுடரே=தானதுவாம்
கண்ணேகருத்தே யென்கற்பகமே சொற்பொருளே
யெண்ணேயெழுத்தே யிதுசமயம்=பண்ணுரைக்குஞ்
சென்னைஇராயபுரஞ்சேர்ந்த தம்புசெட்டிமனை
சொன்னயஞ்சேர் சிங்காரத்தோட்டத்தார்=நன்னயஞ்சேர்
வண்ணாரப்பேட்டையிலும் வாழ்ந்திலங்குந்தென்தெலுங்கர்
கண்ணாரக்கண்டு களிப்புரவே=விண்ணோங்கிப்
பறந்தெகிரிப்பாய்ந்தவர்கள் பாதம்நமஸ்கரித்துச்
சுரந்தெரிந்தே விள்ளுஞ்சுகிர்தம்போல்=அரம்பொருள்சேர்
இன்பம்வீடெய்து மினத்தார் மகிழ்ந்திடவே
அன்போதி அற்புதமாய்=வா

பதினான்குசீராசிரியம்.

புவியினிற் புலவோர்கள் கவியாசு
பகரிலோ பூபாலருமகிபர்
பொன் வெள்ளி நாணயந் தந்துதவி
செய்தவார் புதுவஸ்திரந் தருகுவார்
தவியாமலிருமெனவு முபசாரணை
புரிகுவார் தனவானகளனைவோர்களும்
சன்மார்க்க நெறியுற்று மேன்மேலும்
வாழ்குவார் சரஸ்வதிகடாக்ஷ முறுவார்
செவியின்புறும்படிக் கெமதுமொழிகேட்டு
யெதுசெய்தாலுமது முருகவேள்
சீரடிபணிந்திடும் அடியவற்கேசெய்
திருப்பணியெனத் திகழுமால்
கவிவாணர்வாய்க்யமே கலைமகள்
சொல்வதாய்க் கண்டுகந்தின்புதவுவீர்
கற்றவர்களுக்கினிய கண்யரே தன்
மையாய்க் கவனித்து மகிழ்வெய்தவே.

(வாழிவிருத்தம்)

வாழ்கமாலய னிந்திரர் வானவர்
வாழ்கமாதவஞான விநோதர்கள்
வாழ்கவப்புவி மாந்தர்கள் யாவரும்
வாழ்கதத்தையிசைத் தமிழ்வாழ்கவே.

சுபம். ஸ்ரீசாது காமாக்ஷியம்மன் துணை.

முற்றிற்று

இஃது அச்சியற்றியோரின் தற்சிறப்புப்பாயிரம்

ஆசிரியவிருத்தம்

செல்வர்களிற் சிறந்திலங்குந்திரல்வீரன்
வேதநெறி தேர்ந்தநண்பன்
கல்வியறிவொழுக்கமிவை கற்றிலங்கிக்
கவனமுருங் கருத்தில்மிக்கான்
சொல்விபரந்தெரிந்துணருஞ் சுகுமாரன்
சாதுகுலத் துதித்தவேந்தன்
மெல்லியசொற் கிள்ளைவிடுந் தூதிதனை
அச்சியற்ற விரும்பினேற்கே

அன்புகந்தான் அதற்குமக்கென்வேண்டுமென்றே
அருள்சுரந்தான் அருமைவாய்ந்த
நண்புகந்தான் நம்மவர்க்கோர் நயந்தருவான்
போன்றுகந்த நன்மையாளன்
பண்புகந்தான் பணந்தந்தான் பகர்மதுரத்
தமிழிதனை அச்சிலேற்றி
இன்புகந்தான் யீகைமிகும் இ. கு.
வேதாசல மென்றியற்பேருனே.